**பாடம் 6 - முயல் அரசன்**

**பாடம் : தமிழ்**

**வகுப்பு : 4**

**அ.கடினச் சொற்கள்**

1. தோட்டத்தில்
2. விவசாயி
3. மென்மையான
4. நிம்மதியாக
5. பல்லாண்டு
6. விலங்குகள்

**புத்தகப் பயிற்சி வினாக்கள்**

**அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?**

1. பல்லாண்டு இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______

அ) பல்+ லாண்டு　　　ஆ) ) பல்+ ஆண்டு

இ) பல+ ஆண்டு　　　ஈ) பல+ யாண்டு

2. செயலாக்கம் இச்சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது _______

அ) செய + லாக்கம்　　　ஆ) செயல்+ ஆக்கம்

இ) செயலா + ஆக்கம்　　　ஈ) செயல் + லாக்கம்

3. இப்போது + எல்லாம் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) இப்போதெல்லாம்　　　ஆ) இப்போது எல்லாம்

இ) இப்போல்லாம்　　　ஈ) இப்போ யெல்லாம்

4. பேசி + இருந்தால் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்_____

AAMS KOSAVAPATTY

அ) பேசியிருந்தால் ஆ) பேசியிரு

இ) பேசிஇருந்தால் ஈ) பேசவிருந்தால்

5. வந்து + இருந்தது என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்______

அ) வந்துஇருந்தது ஆ) வந்திஇருந்தது

இ) வந்திருந்தது ஈ) வந்தியிருந்தது.

## ஆ. வினாக்களுக்கு விடையளி

**1. முயலின் கவலைக்குக் காரணம் என்ன?**

இந்தக் காட்டில் உள்ள புலி ஏராளமான நம் முன்னோர்களைத் தன் பசிக்கு இரையாக்கியது போல் என்றாவது ஒரு நாள் நம்மையும் கொன்று தின்றுவிடுமோ.... என்று எண்ணி முயல் கவலைப்பட்டது.

**2. விலங்குகளின் கூட்டத்தில் என்ன தீர்மானம் எடுக்கப்பட்டதாக முயல் கூறியது?**

விலங்குகளின் கூட்டத்தில் புலி காட்டின் அரசனாக நீடிக்கக்கூடாது என்று முயல் கூறியது.

**3. முயல், தான் அரசன் என்பதை நிரூபிக்க புலியை என்ன செய்யக் கூறியது?**

முயல், தான் அரசன் என்பதை நிரூபிக்க புலியிடம் தன்னை முதுகில் ஏற்றிக் கொண்டு சொல்லும்படி கூறியது.

**4. புலியை மன்னித்து விட்டுவிட முயல் கூறிய நிபந்தனை என்ன?**

புலியிடம் நான் உன்னை மன்னித்து விடுகிறேன்.நீ இந்தக் காட்டிலேயே இருக்கக்கூடாது எங்காவது ஓடிப்போய்விடு என்பது தான் முயலின் நிபந்தனை ஆகும்.

AAMSKOSAVAPATTY

5. விலங்குகள் உண்மையில் எதைக் கண்டு அஞ்சின.

விலங்குகள் உண்மையில் புலியைக் கண்டு அஞ்சின.

## இ. எதிர்ச்சொல்லால் சொற்றொடரை நிறைவுசெய்க

1. பருவமழை பெய்தால் மக்கள் மகிழ்ச்சி அடைவர் பெய்யாவிட்டால் கவலை அடைவர்.

2. எப்பொழுதும் உண்மை பேச வேண்டும் பொய் பேசுவதைத் தவிர்க்க வேண்டும்,

3. தோல்வி என்பது முடிவு அல்ல வெற்றியின் தொடக்கம்

4. கணினி மூலம் கல்வி கற்பது புதிய முறை கரும்பலகை மூலம் கல்வி கற்றது பழைய முறை.

5. பிறருக்கு கொடுத்து உதவுவது உயர்ந்த குணம். பிறர் பொருளைத் திருடுவது தாழ்ந்த குணம்.

6. மருத்துவமனையில் சத்தமாகப் பேசாமல் மெதுவாகப் பேச வேண்டும்.

## ஈ. சரி, தவறு எனச் சரியான குறியிடுக

1. புலி, முயலின் முன்னோரைக் கொன்று தின்றுவிட்டது. √

2. முயல் புலிக்கு கரும்பு கொடுத்தது. x

3. விலங்குகளின் கூட்டம் நடந்த போது புலி தூங்கிக் கொண்டிருந்தது. x

4. முயல் புலியிடம் காட்டிலுள்ள விலங்குகள் எல்லாம் தன்னைக் கண்டு அஞ்சுவதாகக் கூறியது. √

5. முயல் புலியைக் காட்டிலிருந்து ஆட்சி செய்ய வேண்டும் எனக் கூறியது. x

AAMSKOSAVAPATTY

**உ. சக்கரம் காட்டும் ஈரெழுத்துச் சொற்கள் என்ன என்பதைக் கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு கண்டுபிடிக்க**

1. உலகம் என்பதன் வேறு சொல் பார்
2. திருவிழா என்றாலே இது இருக்கும் தேர்
3. மக்கள் சேர்ந்து வாழுமிடம் ஊர்
4. இது இல்லாமல் உயிர்கள் இல்லை நீர்
5. நீர் விட்டுத் தயிரைக் கடைந்தால் மோர்
6. மரம்,செடி,கொடி மண்ணில் ஊன்றி நிற்க உதவுவது வேர்
7. மன்னர்கள் தம் நாட்டின் எல்லையை விரிவுபடுத்த அண்டை நாடுகளோடு செய்வது போர்
8. பூத்தொடுக்க உதவுவது நார்

**ஊ. எது முன்னே? எது பின்னே? அகர வரிசைப்படுத்துக**

1. படை
2. பின்னாக்கு
3. பீர்க்கு
4. புத்தகம்
5. பூமி
6. பெட்டி
7. பைந்தமிழ்
8. பொத்தான்
9. போர்வை
10. பௌத்தம்

AAMS KOSAVAPATTY

# மொழியோடு விளையாடு

| பல்லினை மெல்லத் தொடு | நாவினை உள்ளே தள்ளு | நாவினைச் சுழற்றி முழங்கு |
|---|---|---|
| பல்லி | வள்ளி | வாழ் |
| மல்லி | தோள் | அகழ் |
| அகல் | வாள் | தமிழ் |
| சொல் | நாள் | புகழ் |
| நெல் | பள்ளி | யாழ் |
| பால் | வெள்ளி | மகிழ்ச்சி |

AAMS KOSAVAPATTY